## சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை– திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப.,

**ந.க.எண்.616/2017/டி2** **நாள். 19.11.2019**

பொருள். பணியாளர்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சிவகங்கை மாவட்டம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி (தொகுதி –IV)- பேரூராட்சிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் (நிலை 1) பணியிடங்களை – நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்திட தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திலிருந்து 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டுகளுக்கு தேர்வு பட்டியல் வரப்பெற்றது – சிவகங்கை மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூன்று நபர்களுக்கு இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு தனியர்கள் பணியில் சேர்ந்தது– பணியில் சேர்ந்த நாள் முதல் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை.
1.தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதம் எண்.929/PSD- C3/2019, நாள். 13.02.2019
2. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.617/2017/டி2 நாள். 02.03.2019.
3.செயல் அலுவலர், திருப்புவனம் பேரூராட்சி கடிதம் ந.க.எண்.225/2019/அ2, நாள். 08.03.2019
4.செயல் அலுவலர், சிங்கம்புணரி பேரூராட்சி கடிதம் ந.க.எண்.57/2019/அ1, நாள். 07.03.2019
5.செயல் அலுவலர், புதுவயல் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 48/2019/அ1, நாள். 31.05.2019
6. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

****

**ஆணை:-**

தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி IV ல் உள்ளடங்கிய சிவகங்கை மாவட்ட பேரூராட்சி அலகில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் (நிலை–1) பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் பூர்த்திசெய்ய பார்வை 1ல் காணும் தேர்வாணய செயலர் அவர்களின் கடிதத்தின் மூலம் 3 நபர்கள் கொண்ட தேர்வுப் பட்டியல் வரப்பெற்றதைத் தொடர்ந்து, மேற்படி பட்டியலில் இடம்பெற்ற கீழ்கண்ட நபர்களுக்கு பார்வை 2ல் காணும் செயல்முறைகளின் வாயிலாக பணிநியமனம் மற்றும் பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது. அதன் பேரில், மூன்று நபர்களும் அன்னார்களுக்கு பணியிடம் வழங்கப்பட்ட பணியிடங்களில் கீழ்கண்டவாறு பணியில் சேர்ந்துள்ளதற்கான அறிக்கையினை சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் பார்வை 3, 4 மற்றும் 5 ல் காணும் கடிதங்களின் வாயிலாக சமர்ப்பித்துள்ளனர்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒதுக்கீட்டின்படி பணிநியமனம் செய்யயப்பட்ட கீழ்காணும் மூன்று பணியாளர்களுக்கும், கீழே கண்ட அட்டவணை கலம் 3ல் குறிப்பிட்டுள்ளவாறு தனியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணியினை வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர் பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | தற்போது பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1. | திருமதி. R.அபிதா,<br>இளநிலை உதவியாளர்,<br>சிங்கம்புணரி பேரூராட்சி. | 06.3.2019 மு.ப | 06.3.2019 மு.ப |
| 2. | திரு.U.முத்துகிருஷ்ணன்,<br>இளநிலை உதவியாளர்,<br>புதுவயல் பேரூராட்சி. | 31.05.2019 பி.ப | 31.05.2019 பி.ப |
| 3. | திரு.A.பெருமாள்,<br>இளநிலை உதவியாளர்,<br>திருப்புவனம் பேரூராட்சி. | 08.03.2019 மு.ப | 08.03.2019 மு.ப |

மேற்காணும் பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை தனியர்களது பணிப்பதிவேட்டில் பதிவு செய்திட சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
சிவகங்கை.

பெறுபவர்:-
சம்பந்தப்பட்ட பணியாளர்கள்.
( சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் மூலம்)

நகல்:-1) பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை– 28.
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
3) செயல் அலுவலர், சிங்கம்புணரி, புதுவயல் மற்றும் திருப்புவனம் பேரூராட்சி.